சிறுவர்

# அமுதம்

**19.5.96**

கிண்ணம்: **7** எண்ணம்: **5**



**சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை**

**KINDER LITERARISCHES MAGAZIN**

உள்ளே..........


சுண்டெலி 2

வாகனங்களின் கதை 2

மகாபாரதம் 4

நீதிபதி 8

சொ. க. பிடியுங்கள் 13

நாய்ச் சாமியார் 14

வண்ணத்துப்பூச்சி 17

வெட்டுக்கிளி 17

கரடியின் வால் 20

பொன்னான நேரம் 22

நாய்வாலை நிமிர்த்த முடியுமா? 23

குழந்தை விளையாட்டு 25

வினாவிடைப் போட்டி 27

மறக்காதே! 30

சார்லி சப்ளின் 31

# சுண்டெலி

சுண்டெலி! சுண்டெலி!
துறுதுறுத்த சுண்டெலி!

பண்டமெல்லாம் கெடுத்திடும்
பானை சட்டி உருட்டிடும்
கண்ட கண்ட பொருளெல்லாம்
கடித்து நாசம் செய்திடும்

சுண்டெலி! சுண்டெலி!
துறுதுறுத்த சுண்டெலி!

பையில் ஓட்டை போட்டிடும்
பணத்தை இழக்கச் செய்திடும்
கையைக் காலை இரவிலே
கடித்து என்னை எழுப்பிடும்

சுண்டெலி! சுண்டெலி!
துறுதுறுத்த சுண்டெலி!




— அழ. வள்ளியப்பா

## வாகனங்களின் கதை

சைக்கிள் வண்டியின் பிற்பட்ட வளர்ச்சியால் மோட்டார் சைக்கிள் (Motor Bike), ஸ்கூட்டர்

போன்றவை வளர்ச்சி பெற்றன. மணித்தியாலத்திற்கு நூறு கிலோமீற்றர் வேகம் வரை செல்லக் கூடியவை. இரண்டு ஆட்கள் செல்லக் கூடிய இவ்வண்டிகள் இப்பொழுது நவீன முறையில் பலவித நாகரீக வடிவங்களில் காணப்படுகின்றது.



வளர்ச்சி அடைந்த மேலை நாடுகளில் நாலு சக்கரங்களைக் கொண்ட மோட்டார் வண்டிகள் (கார்கள்) முன்னணியில் நிற்கின்றன. நான்கு அல்லது ஐந்து பேர்களை ஏற்றிச் செல்லக்கூடிய வாகனங்கள் இவை. சிறிய தோற்றங்களிலும், நீள, அகலத்தில் பலவித வடிவங்களைக் கொண்டு விளங்குவது கார்கள். காலத்துக்கேற்ற வகையில்

பயணம் செய்பவர்களுக்கேற்ற வசதியைப் பெற்றுள்ளது கார்கள் தான் என்பதில் ஐயமில்லை.

கார் தனிப்பட்டோரின் பாவிப்புக்கு உரியதாகவே இருக்கின்றது. வெகு தூரப் பிரயாணங்களுக்கும் ஏற்றவை. வசதி படைத்தவர்கள் தங்கள் சொந்தப் பாவனைக்காகக் கார்களை வைத்திருக்கிறார்கள் என்றாலும், வாடகைக்கார்களும் (Taxi) இதில் அடங்குகின்றன. நான்கு சக்கரங்களில் இயங்கும் இக் காரை உலகுக்கு அறிமுகம் செய்த பெருமை ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பென்ஸ் என்பவரைச் சேரும்.

—தொடரும்—

## மகாபாரதம்

சந்தனு மன்னன் கங்கையின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான். ஏழாவது குழந்தையையாவது காப்பாற்றி விடுவோம் என்ற எண்ணத்தோடு அரசியாகிய கங்கையின் இருப்பிடத்திற்குச் சென்றான். கங்கையைக் காணவில்லை. சந்தனுவுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. கங்கையிடம் ஏன் இப்படிச் செய்கிறாய்? என்று கேட்கவும் முடியவில்லை. அவள் அழகில் மையல் கொண்ட வேளையில், அவள் அரசனிடம்

இட்ட நிபந்தனைகள் அவனை வாயடைக்கச் செய்திருந்தன.

"நான் யார்? என்ன செய்கிறேன்? ஏன் செய்கிறேன்? என்றெல்லாம் நீர் கேட்கக் கூடாது" என்றல்லவா நிபந்தனை விதித்திருந்தாள் அவள் அழகில் மயங்கி அவள் சொன்னவைகளுக்குக் கட்டுப் பட்டு விட்டேனே! தன்னைத்தானே நொந்து கொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்தான். கங்கையில் அவனுக்கு வெறுப்பு வளரத் தொடங்கியது. இந்தவேளையில் எட்டாவது குழந்தை கங்கையின் வயிற்றில் உற்பத்தியானது. அந்தக் குழந்தையையாவது காப்பாற்றி விட வேண்டும் என்று சந்தனு தனக்குள் முடிவு செய்து கொண்டான்.

ஆண் குழந்தை ஒன்றுக்குத் தாயானாள் கங்கை. வழமை போலவே குழந்தையை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரை நோக்கி நடந்தாள் அரசி. நிழலைப் போலவே அவளைத் தொடர்ந்தான் சந்தனு.
குழந்தையை ஆற்றில் போடும் சமயத்தில் அவளைத் தடுத்து நிறுத்தினான். அவனை அறியாமலே வார்த்தைகள் வெளி வந்தன. "உனக்கென்ன பைத்தியமா! இதையாவது என்னிடம் விட்டுவிடு" குழந்தையை தன் கைகளில் பறித்து வைத்துக் கொண்டே அரசியிடம் சொன்னான் சந்தனு.



கங்கை அவனை நோக்கி 'மன்னனே, நான் விதித்திருந்த நிபந்தனைகளை மறந்து விட்டீரா!' என்றவாறே குழந்தையைக் கொடுத்து விடும்படி கையை நீட்டினாள். மன்னனோ கங்கையைக் கூர்ந்து நோக்கி 'பெண்ணே, நீ யார்? என் பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தைகளை ஆற்றில் போட்டாய்?' என்று கேள்விகளைக் கேட்டான். கங்கை சந்தனுவை புன்முறுவலுடன் நோக்கி 'அரசே, எப்போது நிபந்தனைகளை விலக்கி விட்டாயோ அந்த நிமிடத்தில் இருந்து எனக்கும் எனக்கும் உள்ள பந்தம் விடுபட்டுப் போனது. ஆனாலும் உன் கேள்விகளுக்கான

வினா களைச் சொல்லி விடுகிறேன்" என்று கூறி காரணங்களைச் சொல்லத் தொடங்கினாள்.

அரசே, நான் ஆறுகளின் தெய்வம். கங்கை என்பவள் நான் தான். வசிட்ட முனிவரால் சாபம் பெற்ற எட்டு முனிவர்கள் தங்கள் சாபத்தை நீக்குவதற்கு என்னை உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். என் வயிற்றில் பிறந்தால் தங்கள் சாபம் விமோசனம் பெறும் என்றும் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளின் படியே மழைக் கடவுளான வருண பகவானைப் போல பெருமைக்குரியவனாகிய உன்னைத் திருமணம் புரிந்தேன். எனக்குப் பிறந்த குழந்தைகள் அம்முனிவர்களே. இது எட்டாவது முனிவன். இவன் இந்தப் பூமியில் நீண்ட காலம் வாழ வேண்டியவன். அவனால் உன் சந்திரகுலம் பெருமை பெறும். குழந்தையான இவனை வளர்த்துப் பின் உன்னிடம் சேர்ப்பிக்கிறேன் என்று கூறி கங்கை சந்தனுவை வாழ்த்தி ஆசி கூறி ஆற்றுள் மூழ்கி மறைந்தாள்.

சில ஆண்டுகளின் பின் கங்கைக் கரையில் சந்தனு சென்ற வேளையில் கங்கை மகனை அரசனிடம் ஒப்படைத்தாள். காங்கேயன் என்னும் பெயர் கொண்ட இளவரசனையும் அழைத்துக் கொண்டு சந்தனு அரண்மனைக்குத் திரும்பினான். மகனோடும் மகிழ்ச்சியோடும் சந்தனு வாழ்ந்து வரலானான்.

-தொடரும்-

# நீதிபதி



இது ஒரு பழைய கதை. அந்தக் காலத்தில் மிருகங்கள் கூட மனிதர்களோடு கதைக்கும் தன்மையைக் கொண்டிருந்தன. ஒரு விவசாயி காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். முதல் நாள் காற்றுப் பலமாக வீசிக் கிராமத்தையே சீரழித்து விட்டிருந்தது. தன் வயல் எப்படி இருக்கிறதோ என்று யோசித்துக் கொண்டே விவசாயி நடந்தான். வழியில் நிழல் தந்து

கொண்டிருந்த பெரிய வேலமரம் கீழே விழுந்து கிடந்தது.

அந்த மரத்தின் கிளை ஒன்றுக்குள் பாம்பு அகப்பட்டுக் கொண்டிருந்தது. அது விவசாயியைக் கண்டு விட்டது. "என் மீது இரக்கம் காட்டு. என்னை எப்படியாவது காப்பாற்றி விடு. நான் இங்கிருந்து தப்பிச் செல்ல உதவினால் உனக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன்" என்று கெஞ்சியது. விவசாயி பாம்பின் மேல் இரக்கப் பட்டான். கிளையைத் தூக்கிப் பாம்பு வெளியே வர உதவினான்.

அடுத்த நிமிடமே பாம்பு விவசாயியின் கழுத்தைச் சுற்றிக் கொண்டு சீறியது. விவசாயி திக்குமுக்காடினான். "நான் இப்போது உன்னைக் கடிக்கப் போகிறேன்." என்றது பாம்பு. தான் காப்பாற்றிய பாம்பே தன்னைக் கடிக்க வந்தது கண்டு விவசாயிக்குக் கோபம் வந்தது. ஆனால் என்ன செய்வது! பாம்பிடம் கெஞ்சினான். " நீ, நஞ்சுள்ள பாம்பு என்றும் பாராமல் உன்னைக் காப்பாற்றினேனே! நீ சிறிதும் நன்றி இல்லாமல் என்னைக் கடித்துச் சாக வைக்க நினைக்கிறாயே? இது என்ன நியாயம்" என்றான்.

பாம்பு திரும்பவும் தான் சொன்னதையே சொல்லிக் கொண்டது. மேலும் மேலும் சீறிக் கொண்டு கடிப்பதற்கு முயற்சி செய்தது. அப்போது விவசாயி "பாம்பே, வா, ஒரு நீதிபதியிடம் கேட்போம். அவர் சொல்கிறபடி செய்வோம்" என்றான். "யாரை முதலில் சந்திக்கிறோமோ, அவர் தான் நீதிபதி" என்றது பாம்பு. விவசாயியும் ஒப்புக் கொண்டான். பாம்பைக் கழுத்தில் சுமந்து கொண்டே விவசாயி வழி நடந்தான்.

வழியில் நரி வந்தது. "நரியே, நீ தான் நீதிபதியாக இருந்து எங்கள் வழக்கை விசாரித்துத் தீர்ப்புச் சொல்ல வேண்டும் நேர்மையான தீர்ப்பைச் சொல்லு" என்று விவசாயி நரியிடம் கேட்டுக் கொண்டான். நரி தன் குள்ளப் புத்தியைக் காட்டி, வம்புத் தனமாகத் தன்னை மாட்டி விட்டால் என்ன செய்வது? விவசாயிக்குப் பயமாக இருந்தது. நரி இரு தரப்பு வாதங்களையும் கேட்டது. பின் எதையும் என் கண்ணால் பார்க்க வேண்டும். பாம்பே, நீ எப்படி இருந்தாய் என்று பார்க்க வேண்டும்! வாருங்கள் மரத்தடிக்குப் போவோம் என்று கூறியது.

மரத்தடிக்கு வந்ததும் விவசாயி மரக்கிளையைத் தூக்கினான் பாம்பு கீழே இறங்கியதும், பாம்பின் மேல் மரத்தைப் போட்டான். பாம்பே, எப்படித் தப்ப முடியுமோ அப்படித் தப்பிக் கொள் என்று நரி தீர்ப்புச் சொல்லியது. பாம்பு தன் மடத்தனத்தை எண்ணியது. விவசாயி மிகுந்த நன்றி உணர்வுடன் நரியிடம் சொன்னான். நரியாரே, எனக்குச் செய்த உதவியை என்றைக்கும் மறக்க மாட்டேன்".

நரியோ தன் குணத்தைக் காட்டியது. விவசாயியிடம் சேவலும் பேடுமாக இரண்டு கோழிகள் இருப்பது நரிக்குத் தெரியும். அதை நினைத்துக் கொண்டே "இந்தக் காலத்தில் சும்மா யாராவது உதவி செய்வார்களா? நான் செய்த உதவிக்குச் சன்மானமாக இரண்டு கோழிகளையும் தா! என்று கேட்டது. விவசாயி திகைத்து விட்டான். என்னிடம் இருப்பதே சிறிது வயலும் அந்தக் கோழிகளும் தான். மனச்சாட்சி இல்லாமல் கோழிகளைக் கேட்கிறாயே! என்று கெஞ்சினான்.

நரி ஒப்புக் கொள்ளவில்லை. என்ன செய்வது? அப்போது அவனது நாய் எசமானிடம் வந்தது. "கோழிகளுக்குப் பதிலாக என்னை அனுப்புங்கள்"

என்றது. "உன்னை எப்படி அனுப்புவது1! கோழிகளுக்கும் உனக்கும் வித்தியாசம் இல்லையா! என்ற விவசாயியின் காதுக்குள் நாய் இரகசியமாகப் புத்தி சொல்லியது. விவசாயி கோழிகளை எடுத்தான். நரியாரே, பொறுமையாக இருங்கள். கோழிகளை மூட்டைக்குள் வைத்துத் தருகிறேன். இல்லாவிட்டால் கோழிகள் பறந்து விடும் " என்றான்.

நரியும் மகிழ்வுடன் காத்திருந்தது. விவசாயியும் மூட்டையைக் கொண்டு வந்து கொடுத்தான். நரி மகிழ்வோடு விடை பெற்றுச் சென்றது. ஆவலினால் இடையிலேயே மூட்டையைப் பிரித்துப் பார்த்தது. உள்ளே இருந்த நாய் பாய்ந்து நரியைக் கடித்துக் குதறியது. நாயின் பிடியில் இருந்து எப்படியோ தப்பி நரி தன் இருப்பிடத்தை அடைந்தது. தன் உடம்பில் உள்ள காயங்களை நக்கிக் கொண்டு "என்னுடைய வம்சத்தினர் நீதிபதியாக இருந்ததில்லை. என் அப்பா கூட நீதிபதியில்லை. நான் மட்டும் ஏன் இந்த வேலையைச் செய்யப் போனேன்! என்று அழுதது.

– பாமினி அருள்வரதன் –

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா | தே | ச | ம் | சா | ரு | கி | வா | ளி | கூ |
| இ | றி | மா | ர | ண் | ஞ் | ம | ற் | ரு | ம் |
| ண | த | தி | பா | த | க | ண் | ன | ம் | ர |
| ண் | அ | வ | ணி | போ | க் | ள | ண் | ர | க |
| ல | தை | ர | ண் | மா | னை | ண் | ர | ற் | கி |
| பா | சு | ம் | கு | ச | யா | கி | ப | த | ம் |
| கோ | றி | பு | வ | ம் | ப | ல் | ஞ | ய | ம |
| ளத | பா | ர | தி | ம | க் | தி | யா | ன | ம் |
| பூ | னை | லி | கி | த | ம் | ர | த | ந் | சா |
| இ | டை | ட | அ | [illegible] | பு | வி | ண் | ர | ப |

முடிவு திகதி: 5.7.96

## நாய்ச் சாமியார்

ஒரு கிராமத்தின் எல்லையில் சின்னக் காடு இருந்தது. காட்டின் நடுவில் மலையருவி ஓடிக் கொண்டிருந்தது. அருவிக் கரையில் வயதான கிழவர் ஒருவர் குடிசை கட்டி வாழ்ந்து வந்தார். தாடியுடனான அவரது தோற்றத்தைக் கண்ட கிராமத்தினர் அவரைச் சாமியார் என்று மரியாதையாக அழைப்பார்கள். அவரோடு கூடவே நாய் ஒன்றும் காணப்படும். அது அவரது நாய் தான்.

நாயை அவர் தன் மகனைப் போலவே பாவித்து வளர்த்து வந்தார். நாயும் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும். அருவிக்குச் சென்று வாளியில் தண்ணீர் அள்ளிக் கொண்டு



வந்து கொடுக்கும். வேட்டையாடி மிருகங்களை உணவுக்காகக் கொண்டு வந்து கொடுக்கும். இரவில் கொடிய மிருகங்கள் வராமல் பாதுகாக்கும். இப்படிப் பல விதமான உதவிகளை நாய் செய்து வந்தது. நாயுடனேயே காணப்படும் அந்த முதியவரை "நாய்ச் சாமியார்" என்று கிராமத்தினர் அழைத்தனர். நீங்கள் நினைப்பது போலக் கேலியாகவல்ல. மரியாதையாகவே அழைத்தனர்.

முதியவர் ஒரு வெள்ளாடும் வளர்த்து வந்தார். ஒரு நாள் நாயை வீட்டில் காவலுக்கு நிற்கச் செய்து விட்டு முதியவர் கிராமத்துக்குச் சென்று விட்டார். திடீரென்று குடிசை தீப்பற்றிக் கொண்டது. கயிற்றில் கட்டப் பட்ட வெள்ளாடு குடிசைக்குள் கத்தியது. ஆடும் சேர்ந்து எரிந்து விடப் போகிறதே! என்று நாய் அறிந்து கொண்டது. பெரிய குரலெடுத்து ஓலமிட்டு அழுதது. ஓடியோடி உதவிக்கு ஆட்களை அழைத்தது. எதனாலும் பலன் ஏற்படவில்லை.

நெருப்பையும் பொருட்படுத்தாமல் குடிசைக்குள் பாய்ந்தது. கயிற்றைத் தன் வாயினால் கடித்து அறுத்தது. திகைத்து நின்ற ஆட்டை ஓட ஓட விரட்டியது. காட்டுக்குள் புகையைக் கண்டு சனங்களும் முதியவரும் ஓடி வந்தனர். ஆடும் நாயும் என்னவாயிற்றோ! என்று ஓடி வந்த முதியவருக்கு இரண்டையும் கண்டதும் ஆனந்தமாக இருந்தது. நடந்ததை ஊகித்துக் கொண்ட முதியவர் நாயைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்.

ஒரு நாள் நல்ல காற்றும் மழையும் பிடித்துக் கொண்டது. மலையருவியில் நீர் பெருகியது. பெரியவரின் குடிசையை வெள்ளம் அடித்துச் சென்றது. பெரியவர் நாயையும், ஆட்டையும் அழைத்துக் கொண்டு கிராமத்துக்குச் சென்றார். ஆனால் வெள்ளம் பெருகி கிராமத்துள்ளும் நுழைந்து சேதப்படுத்தியது. கிராமத்தினரின் ஆடுகள், கோழிகள், பொருட்கள் எல்லாம் சேதமாயின. மக்கள் செய்வது அறியாது திகைத்தனர்.

வெள்ளத்தின் வேகம் சில குழந்தைகளையும் அடித்துச் சென்றது. கிராமத்தின் இளைஞர்கள் குழந்தைகளைக் காப்பாற்றினார்கள். ஆனாலும் மூன்று குழந்தைகள் அவர்கள் கைகளுக்குள் அகப்படாமல் வெள்ளம் அடித்துச் செல்லத் தொடங்கியது. முதியவரின் நாய் இதைக் கண்டது. வெள்ளத்துள் பாய்ந்து நீந்தியது. ஒவ்வொரு குழந்தையாக வாயினால் கௌவிக் கொண்டு வந்து கரை சேர்த்தது.

நாயின் விவேகத்தைக் கண்டு கிராமத்துப் பெரியவர்கள் திகைத்தனர். நாயை மிகவும் பாராட்டினார்கள். பெரியவர் நாயைப் பிள்ளை போல வளர்த்ததில் தப்பில்லை என்றும் கண்டு கொண்டனர். அன்று தொட்டு முதியவர் ''நாய்ச் சாமியார்'' ஆனார். இப்போது தெரிகிறதா? நாய்ச் சாமியார் என்பது கேலிக்காக அல்ல என்று.

# வண்ணத்துப்பூச்சி



வண்ண வண்ணப் பூச்சி
வண்ணாத்திப் பூச்சி

வாசமுள்ள மலர்களில்
சொகுசாக அமர்ந்திடும்

அள்ளித் தேனைப் பருகிடும்
அழகாகப் பறந்திடும்

சிறுமி நான் பிடிக்கப் போனால்
சிறகடித்தே பறந்திடும்


- வித்தியா சிவசுப்பிரமணியம் -

[illegible]

வெட்டுக்கிளி என்றதும் கிளி வகைகளில் ஒன்றாக இருக்கும் என்று தப்புக்கணக்குப் போட்டு விடாதீர்கள். எங்கள் நாட்டில் பச்சை நிறத்தில் வெட்டுக்கிளி காணப்படும். கிளிகளும் அதே பச்சை நிறத்தில் இருக்கும். இரண்டுமே வெளிர்ப் பச்சை நிறத்தில் காணப்படும். இதனால் தான் இப்பூச்சியை

வெட்டுக்கிளி என்கிறார்களோ என்னவோ? ஆனால் வெட்டுக்கிளிகள் உலகத்தின் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது.

இந்தப் பூச்சியின் உருவமும் நாட்டுக்கு நாடு சூழ்நிலைக்கேற்ப வேறுபடுகின்றது. மிகப் பெரியது 12செ.மீற்றர் நீளம் வரை காணபபடும். அகலமான தொப்பி போன்ற உருண்டைத் தலையில் இரண்டு உணர் கொம்புகள் உண்டு. வாய் உறுதியான தடித்த உதடுகளைக் கொண்டிருக்கும். தடித்த உதட்டு நுனியில் முட்களைப் போன்று பற்கள் காணப்படும். இரையை அரைத்து ருசித்துச் சாப்பிட இவை உதவுகின்றன.



இரு கூட்டுக் கண்களும், ஒளியின் தன்மையை அறிவதற்குரிய கண்களும் இதற்குண்டு. கால்களும் இறகுகளும் தொண்டைப் பகுதியில் காணப்படுகின்றன. பறப்பதற்குப் பயன்படும் இரண்டு பின்பக்கத்துச் சிறகுகளை தடித்த இரண்டு இறகுகள் மூடி இருக்கும். ஆறு கால்களும் நடப்பதற்குப் பயன்படுகின்றன. பின்னங்கால்கள் இரண்டும் பெரியவை. அதேவேளையில் உறுதியானவை. தாவிக் குதிக்கவும் இவை பயன்படுகின்றன. இரண்டு மீற்றர் தூரம் வரை தாவிச் செல்லக் கூடியது.

தொண்டைப் பகுதியில் இரண்டு சோடித் துவாரங்களும் வயிற்றில் எட்டு சோடி துவாரங்களும் உள்ளன. இத்துவாரங்களால் இவை சுவாசிக்கின்றன. பெண் பூச்சிகள் நிலத்தில் துளையிட்டு அங்கு முட்டையிடும். ஒரே முறையில் நூறு முட்டைகள் போடும். வயல்களில் பயிர்களை நாசப்படுத்தி விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தி விடுகின்றன. அண்மைக் காலத்தில் அமெரிக்காவில் விவசாயத்தை நட்டப்படுத்தியது மட்டுமல்லாமல் விவசாய மக்களையும் கடித்துக் காயப்படுத்தி விட்டன வெட்டுக்கிளிகள்.

தீமை விளைவிக்கும் இப்பூச்சிகளுக்கு தவளைகள், பாம்புகள், பறவைகள் எதிரிகளாக இருக்கின்றன. வெட்டுக்கிளிகளில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு வகை வெட்டுக்கிளிகளுக்கு மெல்லிய உணர்கொம்பு காணப்படும். சிறகுகளை ஒன்றோடொன்று உரசி ஒரு விதமான சத்தத்தை உண்டாக்கும். இந்த வகை வெட்டுக்கிளிகளின் காதுகள் கால்களில் காணப்படுகின்றன.

மற்றொரு வகை சிறிய உணர்கொம்புகளைக் கொண்டது. பழுப்பு அல்லது சாம்பல் நிறமானது. இவை ஏராளமாகப் பெருகி இடம் பெயர்ந்து செல்லும். இவைகளின் காதுகள் வயிற்றுப் பகுதியில் காணப்படும். இந்தவகை வெட்டுக்கிளிகள் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாக மாறும் தன்மை உள்ளவையாகவும் இருக்கின்றன.

# கரடியின் வால்



கரடியை உங்களில் பலரும் மிருகக் காட்சிச் சாலையில் பார்த்திருப்பீர்கள்! பெரிய மிருகமாக இருந்தாலும் அதன் வால் மிகவும் குட்டையானது. கரடியின் வால் குட்டையானதற்கு கதை ஒன்று உண்டு.

ஒருநாள் நரி ஒன்று மீன்களைத் எங்கிருந்தோ திருடிக் கொண்டு வந்தது. அதைக் கரடி கண்டு விட்டது. உடனே நரி கரடியிடம் மீன்களைத் தானே பிடித்து வருவதாகவும், மீன் பிடிப்பது மிகவும் இலகுவானது என்றும் கூறியது. கரடிக்கு எப்படி மீன் பிடிப்பது என்றே தெரியாது.

அது தயக்கமாக "மீன் பிடிப்பது எப்படி என்று எனக்குச் சொல்லிக் கொடு" என்று கேட்டது. அது மிகவும் சுலபமானது என்றது நரி. "அது தான் எப்படி என்று கேட்கின்றேனே?" என்று கரடி

கேட்டது. கரடிக்கு அப்போதெல்லாம் நீண்ட வால் இருந்தது. கரடியின் வாலைப் பார்த்ததும், நரிக்குக் குள்ளப் புத்தி வேலை செய்தது.

கரடியைப் பார்த்து "கரடியாரே, நீர் ஆற்றங்கரைக்குப் போ! உன் வாலை மட்டும் ஆற்றுத் தண்ணீருக்குள் நன்றாகக் கூடிய மட்டும் விட்டுக் கொள்ளும். அதில் மட்டும் மீன்கள் ஒட்டிக் கொள்ளும். உடனே வாலை வெளியே எடுத்து விடும் " என்று கூறியது. கரடியும் நரி சொல்வது உண்மை என்று நினைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றது.

கரையில் இருந்து கொண்டு வாலைத் தன்னால் முடியுமட்டும் தண்ணீருக்குள் நீட்டிக் கொண்டது. கரையில் மீன் கிடைக்குமா, என்ன? நண்டுகள் தான் கரையோரத் தண்ணீரில் இருக்கும். நண்டுகள் சில கரடியின் வாலைக் கடித்துத் துண்டமாக்கி விட்டன. வலி தாங்க முடியாத கரடி "ஹோ ஹோ" என்று பலமாகக் கத்திக் கொண்டு காட்டுக்குள் ஓடியது.

அதன்பின் கரடிக்கு நீண்ட வாலே காணப்படவில்லை. குட்டையான வாலாகவே இப்பொழுதும் இருக்கிறது.

—நிரோஷினி ஹரிச்சந்திரன்—

## பொன்னான நேரம்

வானில் ஏறி ஒளிதரும்
வட்டமான கதிரவன்
மாலை நேரம் போனபின்
மறுநாள் மீண்டும் வருகிறான்

இருளை ஓட்டி ஒளியினை
இரவு நேரம் தருகின்ற
அருமையான வெண்ணிலா
அடுத்த நாளும் வருகின்றான்

எல்லை இல்லாக் கடலிலே
எழுந்தடங்கும் அலைகளும்
நல்ல வண்ணம் கரையினை
நாளும் தேடி வந்திடும்



உதைத்து விட்ட பந்துமே
உயரே பாய்ந்து மீள்வதால்
அதைத் தொடர்ந்து பந்தினை
அடித்தடித்து மகிழ்கிறோம்.

செய்ய வேண்டும் செயலினை
செய்வதற்குத் தவறினால்
மெய்யாய் அந்த நேரமே
மீண்டும் வருவதில்லையாம்!!

-அழகனார்-

## நாய் வாலை நிமிர்த்த முடியுமா?



மணியம் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர். ஆனாலும் அவரது பிள்ளைகள் ஊதாரியாகச் செலவு செய்து வந்தனர். அவர்களுள்ளும் ஒருவன் மக்குப்பிள்ளையாக இருந்தான். அவனைத் திருத்த மணியம் பெரிதும் முயற்சி செய்து வந்தார். ஏனெனில் அவன் அவர் பிள்ளைகளுக்குள் பெற்றோரிடம் அன்பாய் இருந்தவன் அவன் ஒருவன்தான்.

மணியம் ஒருநாள் மக்குப் பிள்ளையான துரையை அழைத்தார். அவனிடம் " துரை, ஒருதரம் கடைக்குப் போய் வா, தெருச் சந்தையில் பழங்கள் வாங்கி வா" என்றார். துரையும் பணத்தை வாங்கிக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான். அப்போது மணியம் மகனைப் பார்த்து "எங்கும் பராக்குப் பார்க்காதே. நேராகச் சந்தைக்குச் சென்று திரும்பி விட வேண்டும். என்ன தெரிந்ததா?" என்றார். அவர் சொல்லியதற்கெல்லாம் தலையாட்டி விட்டு, பையையும் எடுத்துக் கொண்டு துரை சந்தைக்குப் புறப்பட்டான்.

மணியமும் தன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். துரை வருகின்றானா? என்று அடிக்கடி தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார். துரை தூரத்தில் வருவதைக் கண்டதும், அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு விரைவாகத் துரை வருகின்றானே!. ஒருநாளும் நேரத்தோடு வரமாட்டானே!. துரையும் அப்பாவிடம் இன்றாவது நல்ல பிள்ளை என்று பேரெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விரைவாக வந்தான்.

அப்பாவிடம் பையையும் பணத்தையும் கொடுத்தான் துரை. மணியத்திற்குத் திகைப்பாக இருந்தது. பை காலியாக இருந்தது. கொடுத்த பணமும் அப்படியே இருந்தது. "என்ன செய்தாய்? எங்கு போனாய்? பழங்கள் வாங்க வில்லையா?" என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டார். இப்போது துரை திகைத்து விட்டான். "அப்பா, நீங்கள் தானே பராக்குப் பாராமல் நேராகச்

சந்தைக்குச் சென்று திரும்பி வரும்படி சொன்னீர்கள். இப்பொழுது என்னைக் கோபிக்கிறீர்களே!" என்று சொல்லிக் கொண்டு அழத் தொடங்கினான்.

எதற்காகச் சந்தைக்குச் சென்றேன் என்பதைச் சிந்திக்கத் தெரியாத இவனை எப்படித் திருத்தப் போகிறோம்? என்று யோசித்துக் கொண்டே, தம் தலையில் அடித்துக் கொண்டார் மணியம். நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

# குழந்தை விளையாட்டு

(அபினயப் பாடல்)

அம்மா நான் விளையாடப் போவேன்– கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப்(பு) பென்னை
சும்மா நான் உட்கார மாட்டேன்– நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகை யாச்சு



பூப் பறித்தாடுவோம் கொஞ்சம்- சாமி
பூசை செய்தாடுவோம் பூரதம் கட்டி
வேப்ப மரத்தடி மண்ணில்- சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்

வட்டக் குளத்திற்குப் போவோம்- களி
மண்ணை உருட்டித் திரட்டித் வருவோம்.
சட்டிகள் பொம்மைகள் செய்வோம்- பின்பு
சாதம் சமைத்து ஒன்றாய்ச் சாப்பிட்டு அலம்பி

பாட்டுக் கச்சேரிகள் செய்வோம்- நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு
கேட்டுச் "சபாஷ்" எனச் சொல்வார்- பின்பு
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்

வேட்டிகளால் திரை கட்டிப்- பல
வேஷங்கள் போட்டொரு நாடகமாடிக்
காட்டுவோம் பாரதக் காட்சி- நான்
கண்ணனின் சொற்படி காண்டீபன் ஆவேன்
-சுத்தானந்த பாரதியார்-

# வினாவிடைப்போட்டி

1. வீதிகளில் தபால் பெட்டிகள் வைத்துத் தபால் சேவையை முதல் முதல் (1858ம் ஆண்டு) உலகுக்கு அறிமுகப் படுத்திய நாடு எது?
அச்சம், மெல்ல, பிடரி, பக்குவம், ஆகாரம்.

2. கைகளால் உணவு பரிமாறும் முறையை மாற்றி, கரண்டிகளால் உணவு பரிமாறும் முறையைப் புகுத்தியவர் இவர்கள். உங்களுக்குத் தெரியுமா?
எருது, பொற்கிண்ணம், உப்பு, பருத்தி, திரவியம், பயிர்.

3. கடும் குற்றங்கள் புரிந்த தம் நாட்டுக் குற்றவாளிகளை இங்கிலாந்து அரசு இங்கு தான் நாடு கடத்தினார்கள். நாடு எது தெரிகிறதா?
அன்னம், பவுன், இஸ்லாம், ரேடியம், சல்லி, தியானம்

4. இராவணன் பூஜை செய்த ஆலயம் இங்கே தான் இருக்கிறது. இலங்கையின் இயற்கைத் துறைமுகமும் இந்த நகரம்தான். எது என்று தெரிகிறதா?
திலகம், அருவி, இளங்கோ, முக்கோணம், அந்திமந்தாரை, சேலை.

5. தன் மனைவியின் நினைவாக, மொகலாய மன்னன் ஷாஜகான் கட்டுவித்த நினைவுச் சின்னம் இந்தியாவில் ஆக்ரா என்னும் இடத்தில் உள்ளது. இதன் பெயர் என்ன?
தாளம், இராஜ்ஜியம், காமதேனு, பொற்காலம், வல்லமை.

முடிவு திகதி: 5.7.96

வினாவிடைப்போட்டி போட்டி முடிவுகள்:

1. விதையில்லாத பழம் எது?
அன்பு, சன்னிதி, பன்னாடை, இறைச்சி. (அன்னாசி)

2. மகாத்மாகாந்தி பிறந்த இடம் எது?
போலந்து, தமிழ், அப்பம், தபசி, சந்தி, பதம், அல்லல், (போர்ப்பந்தல்)

3. இலங்கையில் பிரசித்தி வாய்ந்த சிற்பங்கள் இவை என்பது உங்களுக்குத் தெரியுமா?
சிங்கம், மக்கி, பரிவு, ஆயாசம். (சிகிரியா)

4.கங்காரு வாழும் பூமி எது?
அன்னம், மாவுத்தன், பஸ்பம், ரேடியம், பல்லி, தயாள குணம், (அவுஸ்ரேலியா)

5.பர்மா நாட்டின் தலைநகரம் எது?
ரங்கோலி, நூங்கு, நங்கூரம், பண்ணை. (ரங்கூன்)

எழுதியவர்கள்:

1. வித்தியா சிவசுப்பிரமணியம்.........SELM
2. மோகன் இரத்தினசபாபதி .........ESCHELBRONN
3. ஜெயதீபா இரத்தினசபாபதி...............ESCHELBRONN
4. ஷோபி யோகராஜா...................NORWEY
5. சுகீவன் சண்முகலிங்கம்..........CLAUSTHAL
6. சுஜீனா சண்முகலிங்கம்...........CLAUSTHAL

7. ஜீலன் தனஞ்செயன்...............MESCHEDE
8. ஜீசன் தனஞ்செயன்................MESCHEDE
9. மஞ்சுளா சிவசம்பு..................LOHMAR
10.. நிரோஷினி ஹரிச்சந்திரன்.......WILDEMANN
11. மைதிலி மாசிலா...................SAARBRÜCKEN
12. தனுஜா மாசிலா...................SAARBRÜCKEN
13. பிரகாஸ் கந்தவனம்...........NORWEY
14. காந்தரூபன் ......................NORWEY
15. முருகேசன் மகேந்திரன்..........BERG.GLADBACH

!!!

காசோலை அதாவது "செக்" எழுதும் முறை 1281ம் ஆண்டு தொடக்கப் பட்டது. முதல் முதல் காசோலை எழுதிப் பெருமைக்குரியவர் இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வேட் ஆவார்.

!!!

இரண்டாம் உலகப் போரில் கூடுதலான இராணுவ வீரர்கள் கொல்லப் பட்ட நாடு ரஷ்யா தான். இன்று நாடுகள் பிரிந்து விட்ட பின்பும் கூட இந்நாடுகளில் ஆண்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது.

# மறக்காதே!

பிறரை நீயும் மதித்தாலே
பிறரும் உன்னை மதித்திடுவர்!
குறையை நீயும் கழித்தாலே
குணமும் உன்னுள் பெருகிவிடும்!

மதிப்பைப் பெறுவது வாழ்க்கையிலே
வளர்ச்சி அடையும் வழியாகும்!
மதிப்பைத் தருவதோ வாழ்க்கைக்கே
மாண்பு தரும் ஒரு செயலாகும்!

மதிக்கத் தெரிந்த இருவருக்கு
மனமும் இருண்டே இருக்காது!
பதிக்க வேண்டும் கருத்திதனை
பயனாய்ப் போற்ற மறக்காதே!
-மதிஒளி-



பணமும் புகழும் சார்லியைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டார். ஆனாலும் தன் சொந்தத்திலேயே



பட நிறுவனம் ஒன்றை உருவாக்கும் எண்ணமும் அவருக்கு இருந்தது. வேலை செய்து கொண்டிருந்த மியூச்சுவல் நிறுவனத்துடனா ன ஒப்பந்தம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. இதனால் வேறு சில பட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து

கொண்டார். அவைகள் வசதியில் குறைந்தவைகளாக இருந்தன.

மிகவும் கஷ்டப் பட்டு வேறுவேறு ஸ்ரூடியோக்களில் படத்தை எடுத்துக் கொண்டிருந்தனர் அந்த நிறுவகத்தினர். சார்லின் எண்ணம் நிறைவேற இந்தச் சந்தர்ப்பம் உதவி செய்தது. இதே வேளையில் சில நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து பெரிய படநிறுவனமாக உருவாகும் தன்மை காணப்பட்டது. இந்நிலை, நடிகர்கள். படத் தொழிலாளர்களுக்கு பாதமாக அமையும் என்று சார்லியும் அவருடன் பணி புரியும் தொழிலாளர்களும் உணர்ந்தனர்.

தாங்களாகவே கூட்டுச் சேர்ந்து ஸ்தாபனம் ஒன்றை நிறுவி விட எண்ணினார்கள். செயல்படுத்தவும் துணிந்தனர். வேலைச் சோர்வுகளை நீக்க சார்லி நியூயோர்க்கில் இருந்து லாஸ்ஏஞ்சலுக்கு வந்து விடுவது வழக்கம். அங்கு "அலெக்ஸ்சாந்திரியா" ஓட்டலில் தொடர்ந்து அறையொன்றை வாடகைக்கு எடுத்திருந்தார். ஒருநாள் மாலைவேளை ஓட்டலுக்கு வந்த சார்லி குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தார். அவருக்கு விருப்பமான பாடலைச் சீட்டியடித்துக் கொண்டே குளித்துக் கொண்டிருந்தார்.

பின் பாடலைப் பாடியவாறே உடைகளை மாற்றிக் கொண்டிருந்தார். பாடலின் வரியொன்று வரை மறுத்தது. திரும்ப அதேவரியைப் பாடினார். திரும்பவும் வரி பூர்த்தியாகவில்லை. மீண்டும் பாடிக்கொண்டார். மறந்த அதே வரியின் மிகுதி தொடர்ந்தது. தொடர்ந்தது அவரல்ல, அடுத்த அறையிலிருந்து இனிமையாக அதுவும் பெண் குரல்.... சார்லி ஒருதரம் திகைத்தாலும் பாடலின் அடுத்த வரியைப் பாடினார். நிறுத்தியதும் அடுத்த அறையில் இருந்து பெண் பாடினாள். பாடலை இருவரும் போட்டியாகவே பாடி முடித்தனர்

தன்னோடு இணைந்து பாடிய பெண்ணை அறிந்து கொள்ள வேண்டுமென்று சார்லி பரபரப்படைந்தார். அவருக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. ஏனென்றால் அந்தப் பாடல் அந்த வாரம் தான் நியூயோர்க்கில் வெளியானது. அது எப்படி இங்கே......... . மீண்டும் அதே பாடலை சீட்டியடித்தார் சார்லி. அவர் நிறுத்தியதும் அடுத்த அறையில் சீட்டி ஒலி தொடர்ந்தது. சார்லி சிரித்துக் கொண்டே "நல்ல வேடிக்கைதான!" என்றார். "சரியாக எதுவும் கேட்கவில்லையே" என்றாள் அடுத்த அறைப் பெண். -தொடரும்-

!!!

இளமையில் தோல்வி அடைந்தால் கவலை கொள்ளாதீர்கள். அடுத்தடுத்து முயன்று வெற்றி கொள்ளுங்கள். இளமை வெகு விரைவில் உங்களைக் கடந்து சென்று விடும். நீங்களும் வளர்ந்து விடுவீர்கள்.

பாஸ்கல் –

!!!


உங்களைப் பற்றி நீங்கள் எப்படிக் கற்பனை செய்து கொள்கிறீர்களோ, அந்த நம்பிக்கையைச் செயல் படுத்த முனையுங்கள். அதுவே நீங்கள் விரும்பிய வாழ்க்கையை வடிவமைத்துக் கொடுத்து விடும்.

ஆப்ரகாம் லிங்கன் –

!!!

அன்பு தான் தாய். சத்தியம் தான் தந்தை. சாந்தி (அமைதி) தான் சகோதரி. புத்தி தான் சகோதரன்.

சத்ய சாய்பாபா –


ஈழம்
எங்கள்
நாடென்போம்
இதையே
தினமும்
பாடென்போம்
தொடர்புகளுக்கு
Siruvar Amutham
Alef Str.11
50189 Elsdorf
Germany
02271/66527